***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 21/2012**

P.W.1 திரு.அன்வர்பாட்ஷா த/பெ.அல்லாபிச்சை நாள் – 03.01.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**3, 5 to 9, 12, 14 பிதிரவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

B-அட்டவணை முதல் அயிட்ட திருக்கட்டளை கிராம சொத்து மனைக்கட்டுகளாக மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்த 2-ம் பிரதிவாதி நபீஷா பீவி, 3-ம் பிரதிவாதி அபுபக்கருக்கு அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்து அதன்படி அவர் மேற்படி B-அட்டவணை முதல் அயிட்ட திருக்கட்டளை கிராம மனைக்கட்டுகளை நேரடியாகவும், மேலும் கிரயம் வாங்கிய நபர்களிடமிருந்து மறு கிரயம் பெற்ற நபர்களும் ஆகிய 4 முதல் 20 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு மனைக்கட்டுகளை கிரயம் வாங்கியவர்கள் வங்கியில் கடன் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரயம் வாங்கிய நபர்கள் அந்த இடத்தில் வீடு கட்டியிருக்கிறார்களா, இல்லையா என்பது பற்றி நீதிமன்ற ஆணையரை அனுப்பி பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு தயாராக இருக்கிறேனா என்றால் சாட்சி தேவைப்பட்டால் நடவடிக்கை எடுக்கலாம் என்று பதில் அளிக்கிறார். 3-ம் பிரதிவாதியிடம் மனைக்கட்டுகளை கிரயம் வாங்கிய நபர்கள் வங்கியில் வீடு கட்டுவதற்காக கடன் பெற்று, அதற்குரிய ஆவணங்கள் வங்கியால் முறையாக பரிசீலனை செய்யப்பட்டு, கடன் பெற்றுள்ளார்கள் என்றாலும், நான் அவர்களிடம் இருந்து பணம் பறிப்பதற்காக பாகப்பிரிவினை என்ற பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், என் சகோதரர்களுக்கும் இடையே ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றாலும், பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, சாட்சி கூடுதலாக பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்று பதில் அளிக்கிறார். நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*